# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். 1.NC 185/விசாரணை/E/2022 & 2.NC 118/விசாரணை/E/2023**

**(SA 12314/E/2021)**

திரு.அ.அம்பேத்குமார் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/வட்ட சார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வாடிப்பட்டி, மதுரை மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

******

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீது ஏற்கனவே இவ்வாணையத்தால் 08.10.2021 மற்றும் 20.08.2025 ஆகிய தேதிகளில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. 20.08.2025 அன்று நடத்தப்பட்ட விசாரணையின் முடிவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், வாடிப்பட்டி வட்டாட்சியர் அலுவலக வட்ட சார் ஆய்வாளர்/பொதுத் தகவல் அலுவலர் 31.10.2025 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில், இவ்வாணையத்தால் 29.12.2025 அன்று கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது ;-

> *4. ஆகவே இவ்வாணை கிடைக்கப் பெற்ற 7 தினங்களுக்குள், மேல்முறையீட்டாளர் அவரது 19.09.2020 தேதியிட்ட மனுவின் நகலை வாடிப்பட்டி வட்டாட்சியருக்கு அனுப்பி வைத்திடவும், அவ்வாறு மேல்முறையீட்டாளர் மனுவினை அனுப்பி வைக்கும்பட்சதில், அம்மனுவினை பெற்ற 15 தினங்களுக்குள் அம்மனு மீது உரிய நடவடிக்கை கொண்டு அது குறித்த மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, மேல்முறையீட்டாளர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தில் 03.02.2026 அன்று பொதுத் தகவல் அலுவலர் நேரில் சமர்ப்பிக்குமாறு வாடிப்பட்டி வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

2. இவ்வாணையத்தின் 29.12.2025 தேதியிட்ட உத்தரவின் அடிப்படையில், வாடிப்பட்டி வட்டாட்சியர் அலுவலக வட்ட சார் ஆய்வாளர் திரு.முத்துராமலிங்கம் 03.02.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, வாடிப்பட்டி வட்டாட்சியர்/ மேல்முறையீட்டு அலுவலரின் 02.02.2026 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

3. வாடிப்பட்டி வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலர் 02.02.2026 தேதியிட்ட தனது அறிக்கையில், ஆணையத்தின் உத்தரவின்படி, மேல்முறையீட்டாளர் 19.09.2020 தேதியிட்ட மனுவை தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றும், ஆணையத்தின் 29.12.2025 தேதியிட்ட உத்தரவிற்கு முன்பாகவே, மேல்முறையீட்டாளருக்கு 29.10.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக அவரது 19.09.2020 தேதியிட்ட அனுப்பி வைத்திட கோரியும், அவர் அம்மனுவினை அனுப்பி வைக்கவில்லை என்று தெரிவித்து, அவற்றின் நகலை இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

4. ஆகவே, மேல்முறையீட்டாளர் அவரது 19.09.2020 தேதியிட்ட மனுவினை அனுப்பி வைக்கும்பட்சத்தில், அம்மனுமீது நடவடிக்கை மேற்கொண்டு அது குறித்த விபரத்தை மேல்முறையீட்டாளருக்கு வழங்கிட பொதுத் தகவல் அலுவலருக்கு அறிவுறுத்தி, இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 06.04.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். 1.NC 185/விசாரணை/E/2022 & 2.NC 118/விசாரணை/E/2023</u>**

**<u>(SA 12314/E/2021)</u>**

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்-625 218.

பொதுத் தகவல் அலுவலர்/வட்ட சார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்-625 218.

திரு.அ.அம்பேத்குமார், த/பெ.திரு.அய்யாச்சாமி
9வது வார்டு, பொட்டுலுப்பட்டி,
வாடிப்பட்டி வட்டம்,
மதுரை மாவட்டம்.

Copy to: Files

RJ/PS 7.4